**செய்தி வெளியீடு எண்: 798** **நாள்: 24.11.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (24.11.2017) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற உடல் உறுப்பு தானம் – வார விழாவில் ஆற்றிய உரை**

**-----**

மாண்புமிகு இதய தெய்வம்
புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே நல்லதொரு கருத்துக்களை வழங்கி
அமர்ந்து இருக்கின்ற மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்களே !

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும்
குடும்ப நலத் துறை அமைச்சர்
டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களே !

நிகழ்ச்சியிலே பங்கு கொண்டிருக்கின்ற
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

தலைமைச் செயலாளர்
முனைவர் கிரிஜா வைத்தியநாதன் அவர்களே !

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை
முதன்மைச் செயலாளர்
டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களே !

புது டெல்லி நோட்டோ இயக்குநர்
டாக்டர் விமல் பண்டாரி அவர்களே !

வருகை தந்துள்ள நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,
முன்னாள் அமைச்சர் பெருமக்களே,
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் உள்ள
துறைத் தலைவர்களே ! அலுவலர்களே !

உடல் உறுப்பு தானம் செய்தோரின் குடும்ப உறுப்பினர்களே!

சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர்கள்
மற்றும் செவிலியர்களே !

வருகை தந்துள்ள பெரியோர்களே தாய்மார்களே !
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே !

உங்கள் அனைவருக்கும் முதற்கண்
எனது வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் உறுப்பு தானத்தை ஊக்குவிக்கும் பொருட்டு
ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் இறுதி வாரம்
உடல் உறுப்பு தான வாரமாக கொண்டாடப்படுகிறது.

அந்த வகையில், இன்று
உடல் உறுப்பு தான விழிப்பு நாள் நிகழ்ச்சியும்,
இந்த நிகழ்ச்சியில் உறுப்பு தானம் செய்தோர் குடும்பத்தினர்,
சிகிச்சை அளித்த மருத்துவ நிபுணர்கள்,
செவிலியர்கள் மற்றும் தமிழ்நாட்டில் சிறப்பாக செயல்பட்ட அரசு
மருத்துவமனைகளை கௌரவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** ஆசியுடன் நடைபெறும் அரசு,
உலகத்தரம் வாய்ந்த
சிகிச்சையினை மக்களுக்கு அளிக்கும் பொருட்டு,
சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துதல்,
மருத்துவ மனித வளத்தை பெருக்குதல்
போன்றவைகளில் தனி கவனம் செலுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒரு முன்மாதிரி மாநிலமாக விளங்கி வருகிறது.

தாய்சேய் நலம் மற்றும்
குடும்ப நல சேவைத் திட்டங்களை செயல்படுத்துவதில்,
முன்னோடி மாநிலமாக திகழ்வதோடு,
நோய்களைத் தடுப்பதற்காக
பல முன்னோடித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

‘‘நலமான மாநிலமே வளமான மாநிலம் ஆகும்.
மேம்பட்ட சுகாதாரம் உள்ள மாநிலம் தான்
உயரளவு உற்பத்தியையும், மேம்பாட்டினையும்
கொண்டிருக்கும்’’ என்று
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்
**12.6.2013** அன்றுநடைபெற்ற புற்று நோய்

சிகிச்சை நிறுவனத்தின்
வைர விழாவில் குறிப்பிட்டிருந்தார்கள்.
அதற்கேற்ப கடந்த ஆறு ஆண்டுகளில்
சுகாதாரத் துறைக்கு மட்டும்
51 ஆயிரத்து 66 கோடியே 45 லட்சம் ரூபாய்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு
இந்தியாவில் உயரிய மருத்துவ சேவை பெற
வசதியுள்ள இடமாக தமிழ்நாடு திகழ்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரக் குறியீடுகளின் இலக்கை அடைவதில்,
தமிழ்நாடு எப்பொழுதுமே
முன்னிலை மாநிலமாக இருந்து வருகிறது.
தாய்மார்கள் இறப்பு விகிதம்,
குழந்தை இறப்பு விகிதம் போன்ற
சுகாதாரக் குறியீடுகளில்
ஐக்கிய நாடுகளின் மில்லினியம் வளர்ச்சி இலக்குகளையும்,
தேசிய இலக்குகளையும் அடைவதில்
தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

அனைத்து மக்களுக்கும் தரமான சுகாதார சேவை
கிடைக்கும் நோக்கத்துடன்,
பல முன்னோடித் திட்டங்களை
தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.
அதன் ஒரு பகுதியாக,
மத்திய அரசு மட்டுமின்றி,
பல மாநில அரசுகளும் பாராட்டும் வகையில்
‘‘தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்’’ துவக்கப்பட்டது.

‘‘ஒருவருடைய சிறந்த உடல்நிலை,
அவருக்கு நம்பிக்கையை வளர்க்கிறது.
அந்த நம்பிக்கை அவருக்கு
எல்லாவற்றையும் வழங்குகிறது’’
என்று ஒரு அரேபிய பழமொழி உண்டு.
அதன்படி மக்களுக்கு நல்ல சுகாதார வசதி
செய்து கொடுப்பதன் மூலம்,
அவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தி
வாழ்வில் வெற்றி பெற வழிவகை செய்ய வேண்டும் என்ற
நோக்கத்தை அடையும் வண்ணம்,
மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு

பல்வேறு திட்டங்களை அமல்படுத்தி வருகிறது.
அதில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில்
24 மணி நேரமும் தாய்சேய் நலச் சேவைகளை வழங்குதல்,
30 படுக்கை வசதிகள் கொண்ட
ஆரம்ப சுகாதார நிலையத்தை
ஒவ்வொரு வட்டாரத்திலும் துவக்குதல்,
தேவைக்கேற்ப இரத்த வங்கிகளை ஏற்படுத்துதல்,
நாடு தழுவிய தடுப்பூசித் திட்டம்,
108 இலவச அவசரகால
ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்துதல்,
104 மருத்துவ தகவல் சேவை போன்ற
பல்வேறு முன்னோடித் திட்டங்களோடு,
முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்,
கூடுதல் நிதி உதவியுடன்
டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி
மகப்பேறு நிதியுதவித் திட்டம்,
அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம்,
அம்மா மகப்பேறு சஞ்சீவி,
அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம்,
தாய்ப்பால் வங்கி போன்ற
பல முன்னோடித் திட்டங்களை
செயல்படுத்தி வருகிறது.

இது மட்டுமின்றி
இருதய நோய், புற்றுநோய், நீரிழிவு நோய் போன்ற
தொற்றா நோய்களின் தாக்கத்தையும்,
பூச்சிகளால் பரவும் நோய்களின்
தாக்கத்தையும் கட்டுப்படுத்த
இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

ஏழை, எளிய மக்களின்
உயிரோடு விளையாடும்
உடல் உறுப்பு வியாபாரத்தை தடுப்பதற்காக,
மனித உறுப்புகள் நீக்குதல், சேமித்து வைத்தல் மற்றும்
உறுப்பு மாற்றம் செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்தி
சிகிச்சை அளிக்கும் நோக்கில்,
**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா** அவர்களால்
இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக

உடல் உறுப்பு மாற்று சிகிச்சை ஆணையம் (TRANSTAN) என்ற
அமைப்பு 2014-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
இந்த அமைப்பு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையை
முறைப்படுத்தும் ஒழுங்குமுறை அமைப்பாக
செயல்பட்டு வருகிறது.

மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில்
தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக
திகழ்ந்து வருகிறது.
இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான்
அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில்
அதிக அளவிலான உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள்
நடைபெறுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த திட்டம் துவக்கப்பட்டதிலிருந்து
இதுவரை 1056 இறந்த கொடையாளர்களிடமிருந்து
**5933** முக்கிய உறுப்புகள் தானமாகப் பெறப்பட்டு
நோயாளிகளுக்கு பொருத்தி மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சிறுநீரகம், இருதயம், கல்லீரல், நுரையீரல்
மற்றும் இருதய வால்வுகள் போன்ற
மனித உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்ய
70 மருத்துவமனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதில்
மிகச் சிறப்பாக செயல்பட்டதற்காக,
**2015** மற்றும் **2016–**ஆம் ஆண்டுகளில்
நாட்டிலேயே முதல் மாநிலத்திற்கான
தேசிய விருதுகளை தமிழ்நாடு வென்றுள்ளது.
தொடர்ந்து இவ்வாண்டும் தமிழ்நாடு முதல் மாநிலம் என்ற தேசிய விருதை பெற,
Hat-trick சாதனை படைக்கும் என்று இங்கே மரியாதைக்குரிய
டாக்டர் விமல் பண்டாரி அவர்கள் தெரிவித்து இருந்தார்கள்.

இங்கிலாந்திலிருந்து வெளியாகும்
***'British Medical Journal'*** என்ற பத்திரிக்கை
தமிழகத்தின் உடல் உறுப்பு தான செயல்பாடுகள்
பிற நாடுகளும் பின்பற்றத்தக்கதாக உள்ளது
என புகழாரம் சூட்டியுள்ளது.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்

தன்னுடைய ***‘மனதின் குரல்’*** பதிப்பில்
உடல் உறுப்பு தானத்தில்
தமிழ் நாட்டின் செயல்பாடுகள் மிக சிறப்பாக இருப்பதால்
மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் ஒரு
முன்மாதிரி மாநிலமாக, சிறந்து விளங்குவதாக
பாராட்டு தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் எந்த செலவும் இன்றி
உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.
இது தவிர,
அங்கீகரிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகளில்
உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.
இதற்காக ஏழை எளிய மக்களுக்கு
முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில்
35 இலட்சம் ரூபாய் வரை
உடல் உறுப்பு மாற்று சிகிச்சைக்காக
அரசு நிதி உதவி வழங்குகிறது. இந்தத் தொகை,
இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் வழங்கப்படாத அளவிற்கு
மிக அதிகமான தொகையாகும்.
உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்குப் பின் தேவைப்படும்
விலை அதிகமான இம்யுனோ சப்ரசிவ் மருந்துகள் கூட
கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது.

மூளைச்சாவு அடைந்தவரின் உறுப்புகள்
செயற்கை சுவாசக் கருவி மூலமாக இயங்குவதால்,
இதயத்தின் செயல்பாடு திடீரென நின்று விட்டால்
எல்லா உறுப்புகளின் செயல்பாடுகளும்
தானாகவே நின்றுவிடும்.
எனவே மூளைச்சாவு அடைந்தவரின் உறவினர்கள்
அதை உறுதி செய்து கொண்டு,
ஒரு விநாடி கூட தாமதிக்காமல்
உறுப்புகளை தானம் செய்வது குறித்து
நல்லதொரு முடிவினை எடுக்க வேண்டும்.
மூளைச்சாவு அடைந்த ஒருவரிடமிருந்து எடுக்கப்பட்ட
இதயம், இதய வால்வு, இரத்தக் குழாய், நுரையீரல்,
கல்லீரல், கணையம், சிறுகுடல், தோல், சிறுநீரகங்கள்,
கண்கள் உள்ளிட்ட உறுப்புகள் மூலம்
அதிகபட்சம் 8 பேருக்கு வாழ்வளிக்க முடியும்.

இத்திட்டத்தின் முழு பயனும் மக்களுக்கு

தகுந்த நேரத்தில் சென்றடையும் பொருட்டு
உருவாக்கப்பட்ட டிரான்ஸ்டான் (TRANSTAN) அமைப்பு
இதற்கென தனியாக ஒரு
இணைய வலைவரிசை ஏற்படுத்தி உள்ளது.
இந்த இணைய வலைவரிசை மூலம்
உடல் உறுப்பு செயல் இழந்தவர்கள்,
அவர்களுக்கு மாற்று உறுப்பு தேவை எனில்
அவர்களின் பெயரை பதிவு செய்துகொள்ளலாம்.

ஒரு சிறு கதையின் மூலம் உடல் உறுப்புக்களின் முக்கியத்துவத்தை நான் விளக்க விரும்புகிறேன்.

வெளிநாட்டில் வாழ்ந்து வந்த ஒரு பெரிய செல்வந்தர் ஒருவர், ஒரு நாள் செய்தித் தாளில் ஒரு விளம்பரம் செய்தார். அவ்விளம்பரத்தில், தான் இதுவரை கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தில் வாங்கிய உலகிலேயே மிக விலை உயர்ந்த தனது காரினை மண்ணில் புதைக்கப் போவதாக கூறியிருந்தார்.

அவ்விளம்பரத்தைப் பார்த்த அந்நாட்டு மக்களின் ஒரு பிரிவினர், இவருக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா ? இப்படி விலை உயர்ந்த காரினை மண்ணில் புதைக்கிறாரே என்றும், மற்றொரு பிரிவினர், இவருக்கு என்ன ஏகப்பட்ட பணம் உள்ளது, கார் என்ன, புது வீட்டையே கட்டி இடித்துவிட்டு மீண்டும் ஒரு வீட்டினை கண்டுவார் என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். அந்த குறிப்பிட்ட நாளும் வந்தது. அப்பகுதி மக்கள் அனைவரும் அங்கு குழுமினர். அப்போது விலை உயர்ந்த காருடன் வந்த அந்த செல்வந்தர் குழுமியிருந்த மக்களை பார்த்து, அந்த காரிலுள்ள வசதிகளை விரிவாக எடுத்துரைத்தார். பிறகு அந்த காரினை மண்ணில் புதைத்தும் விட்டார். பிறகு அங்கு குழுமியிருந்த மக்களிடம், உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் நீங்கள் கேட்கலாம் என்று கூறினார்.

அங்கே குழுமியிருந்த மக்கள் அனைவரும் இவ்வளவு விலை உயர்ந்த காரினை நீங்கள் புதைத்தீர்கள், உங்கள் உறவினர்களுக்கோ, நண்பர்களுக்கோ அல்லது வேறு யாரேனும் ஒரு ஏழைக்கோ கொடுத்திருக்கலாமே என்று கேள்வி எழுப்பினர். அப்போது செல்வந்தர் அவர்களைப் பார்த்து, நான் நீங்கள் கேட்கும் பணத்தைத் தருகிறேன், பதிலுக்கு நீங்கள் உங்களது இதயம், இதயவால்வு, ரத்தக்குழாய், நுரையீரல், கல்லீரல், கணையம், சிறுகுடல், தோல், சிறுநீரகங்கள், கண்கள் ஆகியவற்றைத் தருவீர்களா என்று கேட்டார். அதைக் கேட்ட மக்கள், பதில் சொல்லமுடியாமல் திகைத்து நின்றனர். அப்போது செல்வந்தர், திகைத்து நின்ற மக்களைப் பார்த்து, உயிரற்ற ஒரு காரை புதைக்கும்போது இவ்வளவு வருத்தப்படும் நீங்கள், இவ்வளவு மதிப்பு வாய்ந்த உங்களது உடல் உறுப்புக்கள், யாருக்கும் பயனில்லாமல் மண்ணில் புதைப்பது எந்த விதத்தில் நியாயம் என்று கேள்வி எழுப்பினார். உங்கள் அனைவருக்கும் எளிதில் விளங்க வேண்டும்

என்பதற்காகத் தான் எனது விலை உயர்ந்த காரினை புதைத்தேன் என்று கூறி, உடல் தானத்தின் சிறப்புகளை கூறினார்.

‘‘கொடை இல்லாத வாழ்வு வேறில்லாத மரம் போன்றது’’
என்பது போல உடல் உறுப்பு தானம் மூலம்
நமது உறுப்புகள் பிற உயிர்களில் வாழும்.
எனவே இதை வலியுறுத்தும் வகையில்,
ஆகஸ்ட் மாதம் 13-ம் நாள் முதல்
நவம்பர் மாதம் 27-ம் தேதி வரை
உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை
பொதுமக்களிடம் ஏற்படுத்திட
தமிழக அரசால் பல்வேறு
விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

நாம் மானிடப் பிறப்பு எடுத்ததன் பயன்
மற்றவர்களுக்கு உதவுவதே ஆகும்.
எல்லோரும் கொடையாளிகள்
ஆகி விட்டால், இப்பூவுலகமே
சொர்க்க லோகம் ஆகி விடும்.
இக்கூற்றுக்கு உயிர் கொடுக்கும் விதத்தில் செயல்பட்டு
1056 மூளை சாவு அடைந்த தங்கள் உறவினர்களின் உடல் உறுப்புகளை தானம் செய்து,
மற்றவர்களின் உயிர்களை காப்பாற்ற
காரணமாக இருந்த
குடும்ப உறுப்பினர்களுக்கு
அரசின் சார்பாகவும், எனது சார்பாகவும் பாராட்டையும்,
நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை
என்ற நுணுக்கமான பணியினை
சிறப்பாக செய்து கொண்டிருக்கிற
அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள்,
அனைத்து மருத்துவ நிபுணர்கள் மற்றும்
தொடர்புடைய இதர பணியாளர்களுக்கும்,
அவர்களுக்கு தடையில்லா போக்குவரத்து
போன்ற இதர வசதிகளை செய்து கொடுக்கும்
காவல் துறையினருக்கும் தனியார் அமைப்பினருக்கும்
எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் நன்றிகளையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுப்பு தானம் செய்வோம் – உயிர்களைக் காப்போம்
என்று கூறி, இந்த இனிய விழாவிற்கு
ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றி கூறி
விடை பெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**